**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 250/2019**

**பி.வா.சா.1 – கோமதி**

**<u>02–06–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. யசோதா எனது உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். அவர் இவ்வழக்கை எதர்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் பங்கு பிரித்து தரசொல்லி தாக்கல் செய்துள்ளார். வேறு பரிகாரம் தாக்கல் செய்யவில்லை. பங்கு கேட்பது பொறுத்து மட்டும் தான் எதிர் வழக்காடுகிறேன் என்றால் சரிதான். வேறு பரிகாரங்கள் பொறுத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி எனது அப்பா என்றால் சரிதான். எனது அப்பாவின் தகப்பனார் பெயர் அம்மாசை நாடார். அவர் ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பி மேட்டுப்பாளையம், பொன்னாச்சிப்புதூரில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

2. அம்மாசை நாடார் அவரக்கு பிதுராஜிதவகையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது தகப்பனார் மற்றும் சகோதரர்களுக்கு 1952ம் ஆண்டு வ.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரிவினை செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் அம்மாசை நாடாருக்கும் பி அட்டவணை சொத்தாக விவசாய பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு அம்மாசை நாடார் வாழை, கரும்பு மஞ்சள் மற்றும் பயிர்வகைகளை விவசாயம் செய்து வருமானம் எடுத்து வந்தார் என்றால் சரியல்ல, விவசாயம் இல்லாததால் சேனைக்கிழங்கு வியாபாரம் செய்தார்.

3. அந்த பூமிகளை அம்மாசை நாடார் என்னதான் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அதில் அவர் என்ன வெள்ளாமை செய்து விளைச்சல் எடுத்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. நான்

பொன்னாச்சிபுதூரில் பிறந்தேன் என்றால் சரிதான். நான் எனது திருமணம் வரை பொன்னாச்சிபுதூரில் தான் வசித்தேன். எனது எதிர் வழக்குரையில் எனது தாத்தா சேனைகிழங்கு வியாபாரம் செய்ததை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அவர் சேனைகிழங்கு வியாபாரம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. நான் எனது எதிர் வழக்குரையில் சேனைகிழங்கு வியாபாரம் பற்றி சொல்லவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் மஞ்சள் முதலான பணப்பயிர்களை விவசாயம் செய்து நல்ல வருமானம் எடுத்து வந்தார் என்றால் சரியல்ல. சாட்சிமீண்டும் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறார். நான் எனது தாத்தா வீட்டில் பொன்னாச்சிபுதூரில் தான் பிறந்து வளர்ந்தேன் என்றால் சரிதான். அதனால் அவர் விவசாயம் செய்து வந்த விபரம் எனக்கு நன்கு தெரிந்தும் அதனை மறைப்பதற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனது தாத்தாவிற்கு 1ம் பிரதிவாதி பழனிச்சாமி மற்றும் 2ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியம் மகன்கள் என்றால் சரிதான். எனது தாத்தா இறக்கும் போது அவரது வீட்டில் தான் இறந்தார். எனது அப்பா 1ம் பிரதிவாதிக்கு நானும் வாதியும் 5ம் பிரதிவாதியும் மகள்கள் என்றால் சரிதான். 1952ல் பாகப்பிரிவினையில் எனது தாத்தாவிற்கு வந்த சொத்தை எனது தாத்தாவின் காலத்திலேயே அவரும் அவரது மகன்களும் பாகம் பிரித்துக்கொண்டார்கள். எப்போது பாகம் பிரித்தார்கள் என்றால் 2008ம் ஆண்டு எனது அப்பாவின் பாகத்தை பிரித்து கொடுத்தார். எனது சித்தப்பாவிற்கு அதற்கு முன்பே கொடுத்துவிட்டார்.

6. மேற்படி விபரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் அவ்வாறு எதிர்வழகக்குரையில் சொல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யகா சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2008ம் ஆண்டு எனது அப்பாவின் பாகத்தையும் எனது தாத்தா எனது சித்தாப்பாவிற்கே கொடுத்துவிட்டார். 2011ம் ஆண்டு எனது அப்பாவிற்கு அவரது காலம் வரையிலும் அதன் பிறகு சொத்து எனக்கு என்று உயில் எழுதிவைக்கப்பட்டது. மேற்படி விபரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

7. நான் கூறும் மேற்படி சங்கதிகள் அனைத்து வழக்கிற்காக தவறாக கூறுபவை என்றால் சரியல்ல. எனது தாத்தா இறக்கும்வரை அவரது பிதுராஜித சொத்துக்கள் அனைத்தையும் பாகம் பிரக்காமல் கூட்டாக வைத்திருந்தார் என்றால் சரியல்ல, பிரித்துவிட்டார். தாவா சொத்து 1992 மற்றும் 1993 ஆண்டுகளில் இருவேறு கிரையங்களாக அம்மாசை நாடார் பெயரில் கியைரம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அம்மாசை நாடார் எங்கள் குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற அடிப்படையில் அவரது பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தா அவரது விவசாய வருமானத்தை கொண்டுதான் திருப்பூரில் உள்ள பூமியை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல, சுயமாக சம்பாதித்த வருமானத்தை கொண்டுதான் கிரையம் பெற்றதாக என்னிடம் சொன்னார்.

8. மேற்படி விபரம் எனது தாத்தா சொல்லிதான் தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியும். திருப்பூரில் பூமி வங்குவதற்கு சேனைக்கிழங்கு வியாபாரத்தை கொண்டு வாங்கினார். சேனைக்கிழங்கு வியாபார வருமானத்தை கொண்டுதான் இந்த பூமியை வாங்கியதாக குறிப்பிட்டு எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல்

சேனைக்கிழக்கு வியாபார வருமானத்தைக் கொண்டு தாவா சொத்து கிரையம் செய்யப்படவில்லை என்றும், அவரது பரம்பரை சொத்தின் வருமானத்தைக் கொண்டுதான் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

9. தாவா சொத்தில் வாதி யசோதா குடியிருந்து சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். யசோதா இதுவரை எனது தாத்தாவிற்கோ எனது அப்பாவிற்கோ வாடகை கொடுத்துள்ளார் என்றால் இல்லை. யசோதா வாடகைதாரராக தாவா சொத்தில் இல்லை என்றால் வாடகைதாரராக தான் வந்தார். யாரிடம் வாடகைதாரராக வந்தார் என்றால் எனது தாத்தாவிடம் யசோதாவிற்கு டையம் சரியில்லை என்றும் தாவா சொத்தில் இருந்துகொள்வதாகவும் சொல்லியதன் அடிப்படையில் தாவா சொத்திற்கு வந்தார். வாடகைதாரராக வந்தாரா அல்லது அனுமதிதாரராக வந்தாரா என்றால் அனுமதிதாரராக வந்தார்.

10. மேற்படி விபரத்தை எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. மேற்படி விபரங்கள் அனைத்து நான் வழக்கிற்காக தவறாக சொல்லும் சங்கதிகள் என்றால் சரியல்ல. 07.09.2007 ல் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை அம்மாசை நாடாரின் மனைவியின் காலத்திற்கும், அதன் பிறகு எனது அப்பாவின் காலத்திற்கும், அதன் பிறகு வாதி மற்றும் எனக்கு அம்மாசை நாடார் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலுக்கு பின்னிட்டு எனது தாத்தா உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி உயிலை எழுதி சிறிது காலம் பிறகு எனது தாத்தாவின் உடல் நிலை மோசமாக இருந்ததையும், அவர் சுயமாக சிந்திக்கும் திறன் இல்லாமல் இருந்ததையும் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்தி 28.08.2008 ம் தேதி மோசடியாக ஒரு உயிலை ஏற்படுத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள உயிலின் அசல் என்வசம் உள்ளது. அது எப்போது இருந்து என்னிடம் உள்ளது என்றால் தாத்தா எழுதியதுமுதல் என்னிடம் உள்ளது. இதுநாள் வரை அது எனது பராமரிப்பில் தான் இருந்து வந்தது. இதற்கு முன்பு யசோதா தாக்கல் செய்து பாகக்கலார் வழக்கில் எனது அசல் உயிலை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். நான் சொல்வது போல் அசல் உயில் மேற்படி வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் தாக்கல் செய்த அசல் உயில் தற்போது என்வசம் எப்படி வந்தது என்றால் வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. மனு போட்டு வாங்கினேனா என்றால் மறந்துவிட்டது.

12. எனது அசல் உயிலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அசல் உயிலை தாக்கல் செய்யாததர்க்கு காரணம் எதுவும் இல்லை. பி.வா.சா.ஆ.1 உயிலை எழுதியபோது நானும் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். எனது அப்பாவும் உடன் இருந்தார். மூன்றாம் நபர்கள் யாரும் உடன் இல்லை. உயில் எழுதப்பட்ட விபரம் எனக்கு எனது அப்பாவிற்கும் தவிற மூன்றாம் நபர்களுக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் உயில் சம்பந்தமாக சாட்சி ருக்ருதீன் மற்றும் பெருமாளை விசாரிக்க உள்ளேன்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.06.02 18:12:08 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.